தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 21, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஆகஸ்ட் 6, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி"*

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 345, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

345—

செயற்பொறியாளர் அலுவலகம்

***30361—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் வட்டத்தில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் வட்டத்தில் செயற்பொறியாளர் அலுவலகம் 29 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பள்ளிகொண்டா என்ற இடத்தில் தற்போது இயங்கி வருகிறது. பள்ளிகொண்டா கோட்டத்தின்கீழ் 5 உபகோட்டங்கள் மற்றும் 19 பிரிவு அலுவலகங்கள் உள்ளன. ஆம்பூரில் உதவிப் பொறியாளர் மற்றும் உதவிச் செயற்பொறியாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. ஒரு கோட்டம் அமைப்பதற்கு 4 உபகோட்டங்கள் தேவைப்படுகின்றன. எனவே, பள்ளிகொண்டா கோட்டத்தைப் பிரித்து ஆம்பூரில் புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கு மேலும் 3 உபகோட்டங்கள் மற்றும் 13 பிரிவு அலுவலகங்கள் தேவைப்படுகின்றன. எனவே, ஆம்பூரில் புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைவதற்குத் தேவையான உபகோட்டங்கள் இல்லாததால், ஆம்பூர் வட்டத்தில் செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்கத் தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயற்பொறியாளர் அலுவலகங்கள் திருப்பத்தூர், வாணியம்பாடி, குடியாத்தம், பள்ளிகொண்டா ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு செயற்பொறியாளர் அலுவலகம் கொடுக்கப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஆம்பூரும் ஒரு தாலுகாவாக அறிவிக்கப்பட்டு, இப்போது தாலுகாவாகச் செயல்பட்டு வருகின்றது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆம்பூரைச் சுற்றி பெரிய தொழிற்சாலைகள், ஏற்றுமதி நிறுவனங்கள் இருக்கின்றன. சின்னவரிகம் என்று சொல்லக்கூடிய பகுதியில் அதிகமான*

ஏற்றுமதி நிறுவனங்கள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, 2 AE-க்கள் தற்போது இருக்கிறார்கள். சின்னவரிகம் பகுதியில் கூடுதலாக ஒரு AE அலுவலகம் உருவாக்கி, ஆம்பூர் நகரத்திலே ஒரு செயற்பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளைத் தயவுசெய்து உருவாக்கித் தருமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய விதிமுறைகள் வருவாய்க் கோட்டங்கள் மற்றும் வளர்ச்சிக் கோட்டங்கள் பிரிப்பதற்குப் பொருத்தமாக வராது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் விதிமுறைப்படி ஒரு உபகோட்டம் அமைவதற்குக் குறைந்தபட்சம் 4 பிரிவு அலுவலகங்கள் வேண்டும். ஆகவே, ஒரு கோட்டத்திற்கு 4 உபகோட்டங்கள் அமைய வேண்டும். 16 பிரிவு அலுவலகங்கள் இருக்க வேண்டும். இங்கே இருப்பது மொத்தம் 5 உபகோட்டங்கள்தான். அதை இரண்டாகப் பிரித்தால் 2, 3 ஆகத்தான் பிரிக்க முடியும். ஆகவே, அங்கே 3 உபகோட்டங்கள் என்பது மிகப்பெரிய பற்றாக்குறையாக இருக்கும். மேலும், 3 உபகோட்டங்கள் பற்றாக்குறையாக இருக்கும்போது, 13 பிரிவு அலுவலகங்கள் பற்றாக்குறையாக இருக்கும். எனவே, விதிமுறைக்கேற்ப ஆம்பூரிலே புதிய செயற்பொறியாளர் அலுவலகம் அமைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. பெருகி வரும் மின்தேவைக்கேற்ப மின்கட்டமைப்புகளை மேம்படுத்திக்கொள்ளலாம். அலுவலகம் அமைக்க விதிமுறைகளுக்கேற்ப உபகோட்டங்கள் இல்லையென்ற காரணத்தினால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்த வேண்டாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகொண்டாவிலிருந்து அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டாம். புதியதாக ஆம்பூரில் உருவாக்கித் தரவேண்டுமென்பது 1989 ஆம் ஆண்டு முதல் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து

[2014 ஆகஸ்ட் 6

வருகிறது. மீண்டுமொரு முறை ஆய்வு செய்து, அலுவலகம் வருவதற்கான சாத்தியக்கூறுகளை உருவாக்கிச் செயல்படுத்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், ஆம்பூர் தொகுதியில் ஆம்பூர் மேற்கு, ஆம்பூர் துணை மின் நிலையம் மற்றும் ஆம்பூர் நகரம் என்று மூன்று பிரிவு அலுவலகங்கள்தான் இருக்கின்றன. அந்தப் பகுதிகளில் மேலும் பிரிவு அலுவலகங்களைச் சேர்த்தாலும்கூட, அதிகபட்சமாக, அந்தப் பகுதியில் அதற்குமேல் சேர்ப்பதற்கு வழியில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் 13 பிரிவு அலுவலகங்களை அங்கு புதிதாக உருவாக்கி, 3 உபகோட்டங்கள் உருவாக்கினால் மட்டுமே அதற்குச் சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே, அந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியம் இல்லாத கோரிக்கையாக இருப்பதால்தான் அதை வற்புறுத்த வேண்டாம் என்று சொன்னேன். மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்கிறார். மறுபரிசீலனை செய்யப்படும் என்று சொன்னால், நீங்கள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்கள். அதற்குக்கூட வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

346—

பாலம்

***6563—திரு. மு. ரெத்தினசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்காட்டுப்பள்ளியில் காவேரி ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?